# நேரம் நல்ல நேரம்

கோபப்படாமல் ஓர் உண்மையை நாமெல்லாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். நேரத்தை நமக்குச் சரிவரச் செலவழிக்கத் தெரிவதில்லை. "ரொம்ப விபரமானவன் நான்" என்று பெருமையடித்துக் கொள்கிறவர்கள் கூட இவ்விஷயத்தில் அநேகமாய் ஃபெயில் மார்க்தான் எடுக்கிறார்கள்.

நேரம் என்பது ஓர் அபூர்வமான பொருள். அதைப் பலரும் கண்ணெதிரே வீணாகக் கரைக்கிறார்கள். சிலர், அதை அலட்சியப் படுத்துகிறார்கள். நேரத்தை அழுகும்பொருள் (Perishable Commodity) என்று வருணித்தான் ஒரு மேலைநாட்டு அறிஞன். உண்மை. பலர் வாழ்வில் இது திறந்து வைக்கப்பட்ட கற்பூரமாய் காற்றில் கரைந்து கொண்டிருக்கிறது.

அந்த நேரத்தைப் பிரமாதமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற கூட்டம் ஒரு பக்கம் இருக்க, இப்படியும் சிலர்!

நம்மவர்களுக்கு நேர உணர்வு போதாது (மீண்டும் உங்களை வம்புக்கு இழுக்கிறேனோ?).

நேரத்தின் அருமை நமக்குத் தெரியவேண்டுமானால் வாழ்க்கையில் சிலரைச் சந்திக்க வேண்டும்.

ஓர் ஆண்டின் அருமையை உணர வேண்டுமானால் 5 மதிப்பெண்கள் குறைவாகப் பெற்றதால் தேர்வில் தோல்வியுற்ற ஒரு மாணவனைச் சந்திக்க வேண்டும். அவன் கத்துவான், கதறுவான். ஒரு சிறு கவனக்குறைவால் மீண்டும் படித்த பாடங்களையே ஆண்டு முழுக்கப் படிப்பது எவ்வளவு பெரிய போர்!

ஒரு மாதத்தின் அருமையை உணர வேண்டுமானால் குறைப்பிரசவமாகக் குழந்தை பெற்ற தாய்மார்களைக் கேட்கவேண்டும். குறைப்பிரசவக் குழந்தையைக் காப்பாற்றுவதில்தான் எவ்வளவு இடர்ப்பாடுகள்! சென்னையில் ஒரு பிரபல மருத்துவமனையில் குறைப்பிரசவ குழந்தையைப் பராமரிக்கச் சராசரியாக 1000 ரூபாய் கட்டணம்

அருமையான பொருளைச் சரிவரப் பயன்படுத்தாததால் பிளாட்பாரத்திற்கு வந்திருக்கிறார்கள்.

பிறப்பால் மிகவும் பின்தங்கிவிட்ட ஒரு மனிதன், தனக்கென்று கிடைத்த நேரத்தை முன்னேற்றம், வளர்ச்சி, உயர்வு என்று மந்திரம் ஜெபிக்கிற மாதிரி ஜெபித்து, அதன்படி செயல்பட்டு, மிகச்சிறந்த உயரங்களைத் தொட்டுவிடுகிறான்.

நேரம் என்பது இருபுறமும் கூர்மை உள்ள கத்தி. எனவே நேரத்தை சரிவரப் பயன்படுத்தாவிட்டால் அந்த நேரமே நம்முடைய முதல் எதிரியாகவும் ஆகிவிடுகிறது.

சில பேர் எனக்கு "நேரமே சரியில்லை சார்" என்கிறார்கள். என் நண்பர் ஒருவர், "எனக்கு நேரம் சரியில்லை. தை மாதம்தான் தொழில் ஆரம்பிக்க வேண்டும்" என்றார். இதை அவர் சொன்னது மாசி மாதத்தில்! எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! "என்னது! இன்னும் பதினோரு மாதம் சும்மா இருக்கப் போகிறீர்களா?" என்றேன் அதிர்ந்தபடி.

"ஆமாம்" என்றார் சாவகாசமாக. "அடப்பாவி மனுஷா!" என்று எண்ணிக்கொண்டேன். வாயை விட்டுச் சொல்லத் துணிவில்லை.

உலகில் மைக்ரோ விநாடி கூட (ஒரு விநாடியின் பத்து இலட்சத்தில் ஒரு பங்கு) மகா முக்கியம் என்று

காலங்கள் இப்படி அழுகி, கரைந்து, உருகிப் போனபின் ''ஐயோ! போச்சே போச்சே!'' என்று சிலர் புலம்புவதைப் பார்க்கிறேன். இந்நிலை மாறவேண்டாமா?

பணப்புழக்கத்தில், வாழ்க்கையின் வசதிகளில் மனிதர்களுக்கிடையே நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. உடல் நலத்தை எடுத்துக்கொண்டால் கூட சிலர் மருந்து மாத்திரைகளின் உதவியால்தான் வாழ்கிறார்கள். சிலர் இதையே டிபன் போலச் சாப்பிடுகிறார்கள். சிலர் நான் இதுவரை மருத்துவரிடமே போனதில்லை தெரியுமா? என்று பெருமையடித்துக் கொண்டு சிரிக்கிறார்கள்.

ஆக, மனிதர்களிடையே பொருளாதார விஷயத்திலும், உடல்நல விஷயத்திலும் எவ்வளவு பாகுபாடுகள் இருந்தாலும் நேர விஷயத்தில் மட்டும் பாகுபாடே இல்லை. எல்லோருக்கும் 24 மணி நேரம்தான். ஒரு வினாடி கூட இல்லை, குறைவு இல்லை.

தினமும் இந்த 24 மணி நேரத்தை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே நம் வாழ்க்கை நிலை நிர்ணயிக்கப்படுகிறது.

'நமக்கு நிறைய தேறும்' என்கிற ஆணவத்தோடு இருந்தவர்கள் கூட தங்களுக்குத் தரப்பட்ட நேரம் எனும்

வந்திருந்தால் இந்த உயிரை நான் காப்பாற்றியிருப்பேன்'' என்று. விபத்தில் சிக்கியவர்களை விபத்து நடந்த நேரம் முதல் மருத்துவர்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கும்வரை இருக்கிற நேரத்தை ஆங்கிலத்தில் 'Golden Hour' என்று அழைக்கும் வழக்கம் மருத்துவ உலகில் உண்டு. இந்த தங்க நேரத்திற்குள் அடிபட்டவரை கொண்டுபோய்ச் சேர்க்க முடியாமல் போனதால் எத்தனையோ பேர் தங்களது இன்னுயிரை இழந்துவிட்டார்கள்.

பத்து நிமிடத்தின் அருமையைக் காதலிக்கிறார்கள் அல்லவா, அவர்களைக் கேட்க வேண்டும். இவள் பஸ் ஸ்டாண்டில் காத்துக் கொண்டிருப்பாள். இவன் வந்து தொலையமாட்டான். பார்க்கிறவர்கள் இவளை ஏற இறங்கப் பார்ப்பார்கள். 'இது ஏன் பஸ்ஸிலேயும் ஏறாம வீட்டுக்கும் போகாம இங்கேயே நிக்குது?' என்று யோசிப்பார்கள். அந்தக் கணங்கள் இவளுக்கு ரணங்களாக இருக்கும். இந்த உண்மையை மற்றவர்களால் உணர முடியாது. காதலிக்கிறவர்களுக்குத்தான் பத்து நிமிடத்தின் அருமை தெரியும்.

ஒரு நிமிடத்தின் அருமையை உணர, இரயிலைக் கோட்டைவிட்டார்கள் அல்லவா, அவர்களைக் கேளுங்கள். ''இப்பத்தான் சார் வந்தேன். அதற்குள் இரயில் புறப்பட்டு விட்டது!'' என்பார்கள் பரிதாபமாக

வசூலிக்கிறார்கள். சரி, குழந்தையின் உயிருக்கு உத்தரவாதம் உண்டா என்றால் இல்லை. ஓரிரு மாதங்கள் தள்ளிப் பிறந்திருந்தால் எவ்வளவு இனிமையாக இருந்திருக்கும்.

ஒரு வாரத்தின் அருமையை உணர, வாரப் பத்திரிகைகளின் ஆசிரியர்களைக் கேட்கவேண்டும்.

ஒரு நாளின் அருமையை உணர தினக்கூலிகள், அன்றாடங் காய்ச்சிகள், சாலையோர நடைபாதைக் கடைக்காரர்கள், தள்ளுவண்டி வியாபாரிகளைக் கேட்க வேண்டும். 'பந்த்' என்கிற பெயரால் தேவையில்லாமல் கதவை இழுத்துச் சார்த்துகிற வியாதி இங்கே மிக அதிகம்.

அனைத்தும் செயல்படாமல் போகிறபோது கூடவே வருமானமும் போய்விடுகிறது. ஆகிய வியாபாரத்தை வைத்தும் அன்றன்று கிடைக்கிற கூலியை வைத்தும் பிழைக்கிறவர்கள், பந்த் நாட்களில் வயிற்றில் ஈரத் துணியைப் போட்டுக்கொள்ள வேண்டியதுதான். இவர்களைக் கேளுங்கள். ஒரு நாளின் அருமையைப் பற்றி விலாவாரியாகச் சொல்வார்கள்.

ஒரு மணி நேரத்தின் அருமையை உணரவேண்டுமா? மருத்துவரைக் கேளுங்கள். இவர்கள் சொல்வார்கள், ''சற்று முன்பாக அழைத்து

என்ன, லேனா உதாரணமாக அடுக்கிக்கொண்டே போகிறாரே என்று பார்க்கிறீர்களா? இன்னும்கூட ஒன்று பாக்கி இருக்கிறது. அதுதான் மைக்ரோ செகண்ட். இந்தக் குறைந்த நேரத்தில் அமெரிக்காவில் இருக்கிற ஒரு சூப்பர் கம்ப்யூட்டர் ஒரு கோடியே 60 இலட்சம் கணக்குகளைப் போட்டு முடித்து விடுகிறது.

இனிமேல் எந்த ஒரு நேர அளவீட்டையும் இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்க நாம் கற்றுக்கொண்டு விட்டால் நம்மை மிஞ்ச வேறு ஆள் கிடையாது.

அமெரிக்காவில் ஆத்தர் பாரட் என்கிற அறிஞர், மனிதர்கள் எதையெல்லாம் எப்படியெல்லாம் வீணடிக்கிறார்கள் என்று ஒரு கணக்கெடுப்புச் செய்தார்.

இவருக்கு வேறு வேலையே இல்லையா? என்று அலுத்துக் கொள்ளாதீர்கள். இவர் கண்டுபிடித்துச் சொன்ன உண்மைகள் பலரது புருவங்களை உயர்த்துவனவாக இருந்தன.

ஆத்தர் பாரட் அப்படியென்ன அதிசயமாய்க் கண்டுபிடித்துச் சொல்லிவிட்டார்?

அவருடைய கணக்கெடுப்பின்படி மனிதர்கள் அலங்காரப் பொருள்களில் 10 சதவிகிதம் வரை வீணாக்குகிறார்களாம். இறுதியாக மிஞ்சிப்போகும் சோப்புக்கட்டியை எடுத்துக்கொள்ளுங்கள். இதைச்

இரயிலின் கடைசிப் பெட்டியில் L.V. (Last Van) என்பதைப் பார்த்துப் பரிதாபமாக ஏக்கப் பெருமூச்சு விடுவார்கள்.

ஒரு விநாடியின் அருமையை உணர வேண்டுமானால் சாலையில் விபத்தைச் சந்தித்தவர்களைக் கேட்கவேண்டும். "இப்படித் திரும்பிப் பார்ப்பதற்குள் என்னை அடிச்சுத் தூக்கிட்டான் சார்!" என்பார்கள். சிலர் இதைச் சொல்வதற்குக் கூட இருக்கமாட்டார்கள். போய்ச் சேர்ந்துவிடுவார்கள்!

மில்லி செகண்ட் என்று ஓர் அளவு உண்டு. பலருக்கு இதைப் பற்றித் தெரியாது. இதைப் பற்றியெல்லாம் கவலைப்படும் நிலைமையிலும் இவர்கள் இல்லை. அண்மையில் ஆசியத் தடகளத்தில் ஜோதிர்மாயி தங்கம் வென்றது விநாடி இடைவெளிகளில் இல்லை. விநாடியில் நூறில் சில பங்குகளில்தான். பி.டி. உஷா பத்தாவது ஓடி வந்ததும் விநாடி இடைவெளிகளில் இல்லை. விநாடியில் நூறில் சில பங்குகளில்தான்.

எண்ணிப் பாருங்கள். 4 ஆண்டுகள் பயிற்சி செய்து இப்படிச் சுண்டுகிற நேரத்தின் ஒரு பகுதியில் தங்கப்பதக்கத்தை இழந்தால் அவர்களது மனநிலை எப்படி இருக்கும்!

அடுத்ததாகப் பணம். நாம் செலவழிக்கும் பணத்தில் நூறில் 40 ரூபாய் வீண் செலவு, தண்டச் செலவு, அநியாயச் செலவு என்கிறார் இவர். இதை அவரவர் மனசாட்சியைத் தொட்டுப் பார்த்துத் தாங்களே முடிவுக்கு வரட்டும்.

50 சதவிகிதம் வீணடிப்பு என்பது மருந்தாம். நமக்கு மருத்துவர் எழுதித் தரும் மருந்தில் பாதியை நாம் சாப்பிடுவதே இல்லையாம். மறதி, அலட்சியம், சோம்பல் இவற்றாலும் நோய் குணமாகிவிட்டதாக எண்ணிக்கொண்டு தூக்கி எறிந்து விடுகிறோமாம்.

உச்சகட்டமாக, பாரட் சொல்லும் உண்மை நம்மை அதிர்ச்சி கொள்ள வைக்கிறது.

நம் 24 மணி நேரத்தில் 60 சதவிகித நேரத்தை (சுமார் 14 மணிநேரம்) வீணடிக்கிறோமாம். இது தகுமா? இது நியாயமா?

நாம் அறிந்து கொண்ட மற்ற விஷயங்களைவிட நேர விரயம்தான் மிக மோசமானது என்பதை நாம் உணரவேண்டும்.

மற்றவற்றையெல்லாம் நாம் திரும்பச் சம்பாதித்துக் கொண்டுவிடலாம். ஆனால் நேரம் மட்டும் இழந்தால் இழந்ததுதான்.

சாக்கடையில் போடுவதுதான் நம் இயல்பு. இதையே ஒரு புதிய சோப்பை ஈரப்படுத்தி அதன் மீது அழுத்தி விட்டுவிடலாம். பெரும்பாலானவர்கள் இப்படிச் செய்வதில்லை. தூக்கி எறியப்பட்ட பேஸ்ட் குப்பியைப் பொறுமையாக அழுத்திப் பயன்படுத்தினால் அதையே மேலும் நான்கு நாள்களுக்குப் பயன்படுத்தலாம். சென்ட்டுகள், பவுடர் என்று பலவும் இப்படித்தான் நம்மால் விரயமாக்கப்படுகின்றன.

அடுத்து வீணாக்கப்படுவது உணவாம். பாரட் சொல்கிறார். உணவில் 20 சதவிகிதத்தைத் தெரிந்தே குப்பைத் தொட்டியில் வீசுகிறோம். புபே எனப்படும் உணவை நாமே எடுத்து வைத்துக்கொள்ளும் முறையில்கூட வயிற்றின் தேவை தெரியாமல், பசியின் நிதானம் தெரியாமல் கண்டபடி அள்ளிப் போட்டுக்கொண்டு நுனிவிரலால் தொட்டுப் பார்த்துச் சுவைத்துவிட்டுத் தூக்கி எறிகிறவர்கள் உண்டு.

நம் ஆற்றலில் (Energy) 30 சதவிகிதத்தை நாம் வீணாக்குகிறோமாம். ஒரு கடிதம் எழுதி முடிக்கக் கூடிய காரியத்தை, ‘லோலோ’ என்று சுற்றிப் பிறகு சாதிக்கிறோம். ஒரு தொலைபேசியில் ஆகவேண்டிய காரியத்தை ‘லொங்கு லொங்கு’ என்று அலைந்து தவித்து முடிக்கிறோம். இவை தவிர, நமக்கும் பிறருக்கும் பயன்தராத காரியங்களில் ஈடுபட்டு நம் ஆற்றலின் அளவில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கை வீணாக்குகிறோம்.

போன காலங்கள் போயொழியட்டும். இனிப் புது மனிதர்களாக நாம் உருவெடுப்போம். கண்ணெதிரே வருங்காலம் என்கிற வடிவத்தில் கொட்டிக்கிடக்கும் நேரத்தைச் சரிவரப் பயன்படுத்துவோம்.

இனியேனும் நேரத்தை தயவுசெய்து குறைத்து மதிப்பிட்டு விடவேண்டாம்.

“அண்டாகாகசம்! அபூகாகசம்! திறந்திடு சீசே!!” என்று சொல்லி அலிபாபா குகையில் நுழைந்த கதையாய் இந்தப் பொன்னுலகிற்கு நாம் வந்திருக்கிறோம். இருக்கின்ற நேரத்தைச் சரிவரப் பயன்படுத்தினால் இங்கேயிருந்து அள்ளிக்கொள்ள நிறையவே இருக்கின்றன.

அன்புள்ளங்களும், நட்புள்ளங்களும், வாழ்க்கைத் தேவைகளுக்கேற்ற வளமான செல்வங்களும் நம்மைச் சுற்றிக் கொட்டிக் கிடக்கும்போது இவற்றைப் புறக்கணித்துவிட்டுத் தூங்கிக் கொண்டும், வீணே அரட்டையடித்தபடி பொழுதைக் கழித்துக்கொண்டும் இருக்கலாமா?

சரி, என்னதான் செய்யச்சொல்கிறாய் என்கிறீர்களா?

⌘⌘⌘

காண்பிக்கிறார்கள். நான் போகிறேன். நீயும் வருகிறாயா?'' என்றேன். ‘‘டேய்! இதை ஏண்டா முன்னாடியே சொல்லலை?'' என்றார். அடுத்த அரை மணி நேரத்தில் அவர் என் வீட்டு வாசலில்!

அடுத்து, ஒரு விபரீதக் கற்பனை. ஒரு படுபிசி மனிதர், அவரிடம் நேரம் கேளுங்கள். ‘‘ஓ! நோ! நோ! என்னால ஒரு நிமிஷம் கூட ஒதுக்கமுடியாது'' என்பார்.

‘‘அதுக்கில்லே! எனக்கு அமெரிக்கா போக அழைப்பு ஒன்று வந்திருக்கிறது. என்னுடன் ஒருவரை இலவசமாக அழைத்து வரலாம் என்றும் அந்த அழைப்புச் சொல்கிறது. நீங்களோ படுபிசிங்கிறீங்க. சரி, நான் வேற யாரையாச்சும் கேட்டுப் பாக்கிறேன்!'' என்று ஒரு கழற்றுக் கழற்றுங்கள்!

உடனே அந்த மனிதர் என்ன ஆகிறார் என்று கண்கூடாகப் பாருங்கள்.

இந்நேரம் உங்களுக்கு ஓர் உண்மை பிடிபட்டிருக்க வேண்டுமே! ஆமாம்! மனிதனுக்கு எதிலெல்லாம் ஆர்வம் இருக்கிறதோ அதிலெல்லாம் அவனுக்கு நேரம் இருக்கிறது.

மனிதனுக்கு எதிலெல்லாம் ஆர்வமில்லையோ அதிலெல்லாம் அவனுக்கு நேரமே இருப்பது இல்லை.

# நேரம் இல்லை என்று சொல்லாதீர்கள்!

இந்த உலகை வெற்றி கொள்ள வேண்டுமானால், உலகச் செல்வங்களைக் கையில் சேகரிக்க வேண்டுமானால்,

"எனக்கு நேரமில்லை" என்று சொல்வதை உடனே நிறுத்த வேண்டும்.

எனக்கு நேரமில்லை என்று சொல்வதைப் போன்ற பம்மாத்து வேலை அல்லது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிற வேலை வேறு ஏதுமில்லை.

என்னுடன் பள்ளியில் படித்த நண்பர் ஒருவர் இன்று மிக உயர்ந்த நிலையில் இருக்கிறார். அவரைக் காணவேண்டும் என்று அப்பாயின்ட்மெண்ட் கேட்டேன்.

"சாரி லேனா, நான் ரொம்ப பிசி!" என்றார். "அட சரிதாம்பா, ரொம்பத்தான் அலட்டிக்காதே!" என்றதுடன். ரிலீசாகப் போகிற பிரபல நடிகர் ஒருவரின் படப்பெயரைச் சொல்லி, "அப்படத்தைப் பத்திரிகையாளர்களுக்காக முன்கூட்டியே

நேரத்தில் நல்ல நேரம், கெட்ட நேரம் என்று ஏதும் உண்டா? இது தொடர்பாகவும் இராகுகாலம், எமகண்டம் பற்றியும் நான் விவாதிக்கப் போவதில்லை. என்னைப் பொறுத்தவரை எல்லா நேரமும் நல்ல நேரமே! அதே நேரத்தில் அவை நல்ல தருணங்களாக இருக்கவேண்டும்.

நல்ல தருணங்களைத் தவற விட்டுவிட்டால் வம்புதான்.

என் நண்பர் ஒருவர் செவ்வாய்க்கிழமை அன்று இருதய ஆபரேஷன் செய்துகொள்ள அப்பாயின்ட்மெண்ட் வாங்கியிருந்தார். இத்தனைக்கும் நாளும் கிழமையும் நேரமும் அதிகம் பார்ப்பவர்.

⌘⌘⌘

இது ஒரு பொன் விதி. இதில் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம்.

மனிதர்கள் நேரத்தின் மீது எப்படியெல்லாம் பழி போடுகிறார்கள் தெரியுமா!

*கே: மகளுக்கு ஏதும் கல்யாணம் பேசறீங்களா?*

ப: எங்க இருக்கு நேரம்? ஆபீஸ் போகவும் வரவும்தான் நேரம் சரியாக இருக்கு.

(உள்ளர்த்தம் : திருமணம் பண்ணிக்கொடுத்துட்டா, அப்புறம் அவமூலம் வர்ற சம்பள நஷ்டத்தை எப்படிச் சரிக்கட்டுகிறதாம்.)

*கே: எப்ப என் வீட்டுக்கு வர்றீங்க?*

ப : டயமே இல்லீங்க!

(உள்ளர்த்தம் : வந்தா எனக்கு என்ன இலாபம்? தண்டச்செலவுதான்!)

சாக்குப்போக்கு தேடுகிறவர்கள் தாம் கடிகாரங்கள்மீதும் காலண்டர்கள்மீதும் பழி போடுகிறார்கள். காரியமாற்ற எண்ணுகிறவர்கள் காலத்தை உடும்புப்பிடியாய் பிடித்துக் கொள்கிறார்கள்.

உட்காருவது உண்டு. அதற்காக விமானத்தை, பஸ்ஸைக் கோட்டை விட்டார்களா என்ன? இல்லை.

உலகில் 600 கோடி மக்கள் இருக்கிறார்கள் என்கிறது அண்மைக் கணக்கெடுப்பு. இவர்களுள் 90 சதவிகிதம் பேர் நேரம் பார்த்து வேலைகளைச் செய்வதில்லை. முன்னேறிய மக்கள் அனைவரும் தக்க தருணங்களை, சரியானபடி பயன்படுத்திக் கொண்டவர்களே! இந்த உண்மையை மனத்தில் கொண்டால் என் நண்பர் ஒருவரைப் போல 11 மாதங்களை வீணடிக்கவோ, அன்றாடம் சில மணி நேரங்கள் எவ்விதச் செயலும் செய்யாமல் இருக்கவோ நமக்கு மனமே வராது.

நேரம் என்பது பலர் நினைப்பது போல் எவருக்குமே ஒட்டுமொத்தமாக (Solid) கிடைப்பது இல்லை. அது பிய்த்துப் பிய்த்துத்தான் நமக்கு அளிக்கப்படுகிறது.

சில குடும்பத் தலைவிகளைப் பார்த்திருக்கிறேன். ‘‘வரப்போற ஞாயிற்றுக்கிழமை நம் வீட்டு பரண்களைச் சுத்தம் செய்யப் போகிறேன்’’ என்பார்கள். பல ஞாயிறுகள் வந்து போய்விட்டன. பரண் சுத்தமடைவதாகக் காணோம்.

‘‘எங்கே இருக்கு நேரம்! எனக்கு ஓய்வே இல்லை. வேலை வேலை! அவ்வளவு வேலை! செஞ்சு மாளலை!

# ஓய்வு கிடைத்தால் விடாதீர்கள்!

செவ்வாய்க்கிழமையன்று இருதய ஆபரேஷன் செய்துகொள்ள இருந்த அந்த நண்பரைக் கேட்டேன். "ஆச்சரியமாக இருக்கிறதே! சிறு சிறு விஷயத்திற்கெல்லாம் நேரமும், கிழமையும் பார்க்கிற நீங்கள் முக்கியமான இருதய ஆபரேஷனை செவ்வாய்க் கிழமை அன்று வைத்துக் கொண்டிருக்கிறீர்களே" என்றேன்!

"டாக்டரிடம் நானும் சொல்லிப் பார்த்து விட்டேன். நடக்கவில்லை" என்றார்.

ஆபரேஷனைச் செய்து கொண்டு நல்லபடியாகத்தான் இருக்கிறார் அந்த நண்பர். நல்ல தருணங்களை விட்டுவிட்டால் போயிற்று. அவை திரும்பவரா.

இராகுகாலம், எமகண்டம் பார்த்துத் தவிர்த்து விட்டுப் புறப்படுகிற மனிதர்கள், சில நல்ல காரியங்களுக்காக பஸ்ஸை, விமானத்தைப் பிடிக்க நேர்கையில் அந்த நேரம் சரியாக எமகண்டத்தில்

இந்நிலையில் சிக்கிக்கொண்ட அம்மையாருக்கு எரிச்சல் எரிச்சலாக அல்லவா வரும். எனவே இது சரியான முறையல்ல.

அலுவலக மேஜையைச் சுத்தம் செய்கிறேன், இன்றைக்கு முழுக்க என் அலமாரியைச் சுத்தம் செய்யப்போகிறேன் என்று சொல்லிவிட்டுச் செயலில் இறங்குகிற ஆண்களுக்கும் இந்த விதி பொருந்தும்.

ஒவ்வொரு தட்டாக, ஒவ்வொரு ட்ரே ஆக சுத்தம் செய்வதுதான் புத்திசாலித்தனம்.

சிலபேர் புத்தகம் படிக்கிறேன், வீடியோ கேசட் பார்க்கிறேன் என்று வாங்கி வைத்துக்கொண்டு நாள் கணக்கில் திரும்பத் தரமாட்டார்கள்.

இவர்களை ஒரு பிடி பிடிப்போம்!

⌘⌘⌘

இவருக்கோ, பிள்ளைகளுக்கோ கொஞ்சங்கூடப் பொறுப்பு என்பதே கிடையாது. இஷ்டத்துக்குத் தூக்கி எறிய வேண்டியது. அப்புறம் காணம்னு என் உயிரை எடுக்கவேண்டியது'' என்று புலம்பித் தள்ளுவார்கள்.

வீட்டை ஒழித்து வைக்க ஞாயிற்றுக்கிழமையைத் தேர்ந்தெடுப்பது அவ்வளவு புத்திசாலித்தனமல்ல. அன்றைக்கென்று பார்த்து தொலைக்காட்சியில் நல்ல படமாகப் போடுவார்கள். எழுந்திருக்க மனமே வராது.

திடீரென்று விருந்தினர்கள் வந்துவிடுவார்கள். நேரம் ஓடிப் போய்விடும்.

எனவே ஒரு மணிநேர இரண்டு மணிநேர ஓய்வோ, இடை வெளியோ கிடைத்தால் அதை விடக்கூடாது. நான்கு பக்கமும் பரண் என்றால் ஒரு பக்கத்துப் பரணை மட்டும் சுத்தம் செய்ய ஆரம்பிக்க வேண்டும். அதை மட்டும் ஒழித்தெடுத்துச் சுத்தம் செய்து வைத்து விட்டு மீண்டும் நேரம் இருக்கிறபோது மறுபக்கப் பரணைப் பிரித்தெடுத்து வைக்கவேண்டும்.

சில பெண்மணிகள் எல்லாப் பரண்களிலும் உள்ள சங்கதிகளை இறக்கி வைத்துவிட்டு தீவு மாதிரி நடுவில் உட்கார்ந்து கொள்வார்கள். கணவர் கூப்பிடுவார், பிள்ளைகள் ஏதாவது கேட்பார்கள், யாரேனும் வருவார்கள், தொலைபேசி மணி அடிக்கும்.

# கடிதங்கள் வெறும் காகிதங்களல்ல!

என் நண்பர் ஒருவர் என் மகனின் பிறந்த நாள் வீடியோ கேசட்டைப் பார்க்கவேண்டும் என்று கேட்டார். கொடுத்தேன். ஒரு வாரம் கழித்துக் கேட்டேன்: ‘‘பார்த்துவிட்டீர்களா?’’ ‘‘இல்லை, நேரமில்லை’’ என்றார். ஒரு மாதம் ஆயிற்று. எதிர்பாராத விதமாய் சாலையில் கண்ணில்பட்டார். ‘‘அந்தக் கேசட்...’’ என்று தயக்கமாய் இழுத்தேன். முகத்தில் அசட்டுக்களையோடு ‘‘ரொம்ப பிசியா இருக்கேன். நேரமில்லை, சீக்கிரம் பார்த்துடறேன்’’ என்றார்.

ஆறு மாதம் கழித்து அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். பார்த்தாலும் பார்த்திராவிட்டாலும் கொடுத்தனுப்புங்கள் என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். கேசட் வந்தது. நான் ஓட்டிவிட்டு நிறுத்தியிருந்த அதே இடத்தில் அது இருந்தது என்பது செய்தி. மனிதர்களுக்கு ஒருநேரம் இருக்கிற ஆர்வம் மறுநேரம் இருப்பது இல்லை. இதற்கு நேரத்தின் மீது பழிபோடுவானேன்?

புத்தகம் படிக்கிறேன் என்று வாங்கிப்போகிறவர்களும் இதேபோல் நாட்களைக்